# பொதுப்பணித்துறை
# கட்டட அமைப்பு

## 12 புதிய ஈப்புகள் (Jeeps) மற்றும் 2 புதிய சீருந்துகள் (Cars) வழங்கும் விழா

நாள் – 10.12.2007, காலை 9.00 மணி

இடம் – பொதுப்பணித்துறை, பாலாறு இல்லம், காமராஜர் சாலை, சென்னை–5

வழங்குபவர்– மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள்

- அரசின் நலத்திட்டங்கள் விரைந்து மேற்பார்வையிட்டு செயல்படுத்துவதற்கு பொதுப்பணித்துறையில் உள்ள பழைய உபயோகிக்க முடியாத ஈப்புகளுக்கு பதிலாக புதிய ஈப்புகள் வழங்கி அப்பணிகளை நல்ல முறையில் துரிதமாக செயல்படுத்த அரசு முடிவு எடுத்ததின்அடிப்படையில் சென்ற ஆண்டு (2006–2007)

- பொதுப்பணித்துறை கட்டட அமைப்பிற்கு கழிவு செய்யப்பட்ட பழைய ஈப்புகளுக்கு பகுதி.2 திட்டத்தின்கீழ் அரசாணை எண். 134, பொ.ப (ஜி.1) துறை, நாள் 19.09.2006ன்படி 24 புதிய ஈப்புகள் வாங்க ரூ.95.00 இலட்சம் அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டதின்படி 24 புதிய ஈப்புகள் வாங்கப்பட்டு மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் 04.01.2007 அன்று வழங்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.

- இவ்வாண்டும் (2007–2008) கழிவுசெய்யப்பட்ட ஈப்புகளுக்கு பதிலாக பகுதி.2 திட்டத்தின்கீழ் அரசாணை எண். 142, பொ.ப (ஜி.1) துறை, நாள் 31.05.2007ன்படி 12 புதிய ஈப்புகள் வாங்க ரூ.51.00 இலட்சமும், அரசாணை எண். 162, பொ.ப (ஜி.1) துறை, நாள் 06.06.2007ன்படி 2 புதிய சீருந்துகள் (Car) வாங்க ரூ.8.00 இலட்சற்கு, அரசு ஆணையிட்டதற்கிணங்க 12 புதிய ஈப்புகள் மற்றும் 2 புதிய சீருந்துகள் (Car) தற்பொழுது வாங்கப்பட்டு பொதுப்பணித்துறை கோட்டங்களுக்கு புதிய ஈப்புகள் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் இன்று (10.12.2007) வழங்கப்பட்ட உள்ளது.

- 12 புதிய ஈப்புகள் கீழ்காணும் பொதுப்பணித்துறை கோட்டங்களுக்கு வழங்கப்பட உள்ளது
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டங்கள் காஞ்சீபுரம், கடலூர், நாமக்கல், திருவாரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கட்டட கட்டுமானக் கோட்டங்கள், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மேலும் கட்டட பராமரிப்புக் கோட்டங்கள், மதுரை, மின் கோட்டம் திருநெல்வேலி, சென்னை கட்டுமானக் கோட்டம் எண்.2 மற்றும் 2 சீருந்துகள் (Cars) தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னைக்கும் கண்காணிப்புப் பொறியாளர், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சென்னைக்கும் வழங்கப்பட உள்ளது.

- பொதுப்பணித்துறையில் மீதமுள்ள கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்கு பதில் 12 புதிய ஈப்புகள் வாங்க எதிர்வரும் ஆண்டு 2008–2009 பகுதி–2 திட்டத்தின் கீழ் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

ர. ராஜி,
தலைமைப் பொறியாளர் (கட்டடம்)
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5